சிகரத்தின்

# தினத் தென்றல்

SIGARATTHIN DHINATHENDRAL

தமிழ் சமுதாயத்தின் குரல்

TAMIL DAILY Rs. 4

Vol: 13 ● Issue: 198 ● வெள்ளிக்கிழமை ● 09.10.2026 ● சென்னை ●கோவை ● திருச்சி ● திருநெல்வேலி ● 4 பக்கம் ● விலை ரூ.4






**மேகேதாட்டு வழக்கை துரிதப்படுத்த வைகோ வலியுறுத்தல்**

**விமானப்படை வீரர்களால் இந்தியா பெருமை கொள்கிறது: பிரதமர் மோடி**

**ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணியை தனியாருக்குத் தாரைவார்ப்பதா?**












## தீபாவளி முதல் தொடக்கம்: தமிழகத்தில்

# கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை

**சென்னை, அக்.09:** தமிழகத்தில் சர்க்கரை ஆலைகளுக்குப் பதிவு செய்து கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு 20252026ஆம் ஆண்டின் அரவைப் பருவத்துக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ 603.34 கோடி வழங்கப்படும் என வேளாண் துறை அமைச்சர் வினோத் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட அரசாணையின் விவரம்: கரும்பு விலையை உயர்த்தி வழங்கவேண்டும் என்ற விவசாயிகளின் தொடர் கோரிக்கையினைப் படிப்படியாக நிறைவேற்றிடும் வண்ணம் தமிழ்நாட்டில், இனிக்கும் கரும்பினை சாகுபடி செய்யும் விவசாயிகளின் நலனைக் காத்திட, தமிழ்நாடு முதல்வர் சட்டப் பேரவை விதி எண் 110ன் கீழ் கரும்பிற்கு முன் எப்போதும் இல்லாத வகையில் ஒன்றிய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.709.50 வழங்கப்படும் என அறிவித்தார்.

இதன் வாயிலாக கரும்பு விவசாயிகள், கரும்பு விலையாக டன் ஒன்றிற்கு ரூ.4,000 பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடிப் பரப்பு உயர்ந்து சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள் மேம்படுவதுடன், சர்க்கரை மற்றும் உபபொருட்களின் உற்பத்தியும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு முதல்வரின் ஆணையின்படி 202526ஆம் ஆண்டு அரவைப்பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு மாநில அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றிற்கு ரூ.709.50 வழங்குவதற்காக ரூ.603.34 கோடி நிதியினை மாநில நிதியிலிருந்து வழங்கி தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 20252026ஆம் ஆண்டுபருவத்தில் அரவைப்பணி மேற்கொண்டுள்ள 12 கூட்டுறவு, 2 பொதுத்துறை மற்றும் 15 தனியார் சர்க்கரை ஆலைகள் என மொத்தம் 29 சர்க்கரை ஆலைகளில் 9.5 சதவீத சர்க்கரைக் கட்டுமானத்திற்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான ரூ.3,290.50 மற்றும் மாநில அரசின் சிறப்பு ஊக்கத் தொகையான ரூ.709.50 யையும் சேர்த்து, டன் ஒன்றிற்கு ரூ.4,000/ கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. சர்க்கரைக் கட்டுமானம் 9.5 சதவீதத்திற்கு மேல் உள்ள கரும்பிற்கு அதற்கேற்ப ரூ.4000 க்கும் அதிகமாக கரும்பு விலை கிடைக்கப்பெறும்.

மேலும், இந்த அரசாணையின் படி, 01.10.2025 முதல் 30.09.2026 வரை சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு வழங்கிய விவசாயிகளின் கரும்பு எடை, ஆதார் எண், வங்கிக்கணக்கு போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் மாவட்ட அளவிலான குழுவினரால் பரிந்துரைக்கப்பட்டு, சர்க்கரைத்துறை இயக்குநரகத்தால் கூர்ந்தாய்வு செய்யப்பட்ட பின்னர் தகுதியுள்ள விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படும்.



தமிழ்நாடு மின் ஆளுமை முகமையினால் ஒத்திசைவு செய்யப்பட்ட ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள விவசாயிகளின் வங்கிக் கணக்குக்கு நேரடிப் பணப்பரிவர்த்தனை வாயிலாக சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவது குறித்து எதிர்வரும் தீபாவளிப் பண்டிகை முதல் தொடங்கப்படும். இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகின்றன.

இதனால் சுமார் 90,000 கரும்பு விவசாயிகள் பயனடைவர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்காசியில் பாஜக சார்பில்

# 'மோடி 25 ஆண்டு சேவா ஜோதி யாத்திரை'

**தென்காசி, அக். 09:** பிரதமர் நரேந்திர மோடி, குஜராத் முதல்வர் மற்றும் நாட்டின் பிரதமராக தொடர்ந்து 25 ஆண்டுகள் மக்கள் சேவையை நிறைவு செய்ததை முன்னிட்டு, தென்காசியில் பாஜக சார்பில் 'மோடி 25 ஆண்டு சேவா ஜோதி யாத்திரை – விக்சித் பாரத் சங்கல்ப் சபா' நடைபெற்றது.

2047க்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் இலக்கை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் நாடு முழுவதும் நடைபெறும் நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக, தென்காசி புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சிக்கு பாஜக மாவட்டத் தலைவர் ஆனந்தன் அய்யாசாமி தலைமை வகித்தார்.




மாவட்ட பொதுச் செயலாளர்கள் பாலகுருநாதன், அருள் செல்வம், பால சீனிவாசன், மாவட்ட பொருளாளர் கோதை மாரியப்பன் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்த மாவட்ட இளைஞ ரணி தலைவர் விவேக் குமார் வர வேற்றார். மாநில விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டுப் பிரிவு தலைவர் நைனார் பாலாஜி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின், பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் காணொளி வாயிலாக உரையாற்றினர். "We Will Do It" என்ற முழக்கத்துடன், 2047க்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டும் என பிரதமர் அழைப்பு விடுத்தார்.

தொடர்ந்து 'விக்சித் பாரத் -2047' உறுதிமொழி ஏற்கப்பட்டு, 25 ஆண்டு மக்கள் சேவையைக் குறிக்கும் சேவா ஜோதி ஏற்றப்பட்டது. பின்னர் தென்காசி புதிய பேருந்து நிலையத்திலிருந்து சக்தி நகர் வரை சேவா ஜோதி வாகனப் பேரணி நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான பாஜக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் மாநில செயற்குழு உறுப்பினர்கள் தீனதயாளன், அன்புராஜ்; மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் சீனிவாசன், கிருஷ்ணசாமி; மாவட்ட துணைத் தலைவர்கள் பால முருகன், முத்துக்குமார், தர்மர், ராஜ லட்சுமி, ராம்குமார், புலிக்குட்டி; மாவட்ட செயலாளர்கள் அருணாச்சலம், மந்திரமூர்த்தி, மரகத முப்பிடாதி, சண்முகராஜ்; பட்டியல் அணி மாநில செய லாளர் முருகன் ஆகியோர் பங் கேற்றனர்.

மேலும் ஓபிசி அணி மாவட்ட தலைவர் மாரியப்பன், மகளிர் அணி மாவட்ட தலைவி குணசீலா, பட்டியல் அணி மாவட்ட தலைவர் அசோக், சிறுபான்மையினர் அணி மாவட்ட தலைவர் அலெக்ஸ் தேவேந்திரன், இளைஞரணி மாநில செயற்குழு உறுப் பினர்கள் சங்கர், உமா மகேஸ்வரி, இளைஞரணி மாவட்ட பொதுச் செயலாளர்கள் கார்மேகநாதன், ரஞ்சித் உள்ளிட்ட பல்வேறு அணிகள் மற்றும் பிரிவுகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட பிரிவு அமைப்பாளர்கள் வேல்பாண்டியன், கருப்பசாமி, வடிவேல் முருகன், கணேசன், முருகன், முரளிதரன், சண்முகசுந்தரம், சுப்பிரமணியன், நாகராஜ், ராமச்சந்திரன் மற்றும் மண்டல் தலைவர்கள் வைகுண்ட ராஜா, முருகன், கணேசன், இசக்கி முத்து, தட்சிணாமூர்த்தி, சரவணன் வேல் முருகையா, அன்பழகன், முத்துமாரியம்மன், பால்ராஜ், செல்வகுமார், கணேசன், முருகேசன், பரமசிவம், உதய குமார், குட்டி ராஜ், வீர குமார் உள்ளிட்டோர் பங் கேற்றனர்.

நிறைவாக தென்காசி நகரத் தலைவர் சங்கர சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## பெரம்பூர் தொகுதி தேர்தல் வழக்கு:

# அக்.14ல் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

**சென்னை, அக்.09:** பெரம்பூர் தொகுதியில் தான் வெற்றி பெற்றதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் வழக்கை நிராகரிக்க கோரி முதல்வர் விஜய் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பை, சென்னை உயர் நீதி மன்றம் அக்டோபர் 14ஆம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளது.

பெரம்பூர் தொகுதியில், 53 ஆயிரத்து 715 வாக்குகள் வித்தியா சத்தில் முதல்வர் விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து தொகுதி வாக்காளர் தினேஷ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கை தாக்கல் செய்திருந்தார்.



இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி முதல்வர் விஜய் தரப்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனுவை நீதிபதி வி.லட்சுமி நாராயணன் விசாரித்தார். விஜய் தரப்பில், வேட்புமனுவில் அனைத்து தகவல்களையும் தெரிவித்துள்ளதாகவும், எந்த தகவலையும் மறைக்கவில்லை என வாதிடப்பட்டது.

தேர்தல் வழக்கை தாக்கல் செய்திருந்த வாக்காளர் தினேஷ் தரப்பில், முதல்வர் விஜய் தனது வேட்புமனுவில், பண்ருட்டியில் வாங்கியிருந்த 30 கோடி ரூபாய் மதிப்பிலான விவசாய நிலம் குறித்த விவரங்களை தெரிவிக்கவில்லை எனவும், தகவல்களை மறைத்தது, வாக்காளர்கள் சுதந்திரமாக முடிவெடுக்கும் திறனில் தேவையில்லாத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் வாதிடப்பட்டது.

வேட்புமனுவில் தகவல்களை மறைப்பது, வாக்காளர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துவது தான் என சென்னை உயர் நீதி மன்ற தீர்ப்பளித்துள்ளது. கொடைக்கானல் வில்பட்டி கிராமத்தில் வாங்கியுள்ளதாகக் கூறியுள்ள 50 செண்ட் நிலம், வருவாய் துறை ஆவணங்களின் படி, அரசு புறம்போக்கு நிலம் என தினேஷ் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டது.

வேட்புமனுக்களில் குற்ற வழக்குகளை மறைப்பது எப்படி விதிமீறலோ, அதேபோல சொத்து விவரங்களை மறைப்பதும் விதிமீறல் மட்டுமல்ல ஊழல் நடவடிக்கை. விவரங்கள் மறைத் தது குறித்து தேர்தல் அதிகாரி முழுமையான விசாரணை நடத்த முடியாது. தேர்தல் வழக்கில் தான் இதுகுறித்து விரிவாக விசாரிக்க முடியும் என்பதால், தேர்தல் வழக்கை நிராகரிக்கக்கூடாது என வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி லட்சுமிநாராயணன், ஆக்கிரமிப்பாளர் தேர்தலில் போட்டியிடுவதில் தகுதி இழப்பு ஏற்படுகிறதா? வில்பட்டி நிலம் தொடர்பாக விஜய், விற்பனை பத்திரத்தை வேட்புமனுவில் தாக்கல் செய்துள்ளாரே எனவும் கேள்வி எழுப்பினார். அதற்கு தினேஷ் தரப்பில், வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாக விளக்க மளித்தார்.

முதல்வர் விஜய் தரப்பில், வேட்புமனுவில் தகவல்களை மறைத்தது வாக்காளர்கள் சுதந்திரமாக முடிவெடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தும் என சென்னை உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு, குற்ற வழக்கு சம்பந்தப்பட்டது. விஜய் வசதி படைத்தவர் என எல்லா வாக்காளருக்கும் தெரியும்.

அப்படி இருக்கும்போது, சொத்தை மறைத்ததாகக் கூறி, அது வாக்காளர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என எப்படி கூற முடியும் என வாதிடப்பட்டது.

தினேஷின் தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி முதல்வர் விஜய் தாக்கல் செய்த மனு மீதான அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்ததை அடுத்து, அந்த மனு மீதான தீர்ப்பை, அக்டோபர் 14ஆம் தேதிக்கு நீதிபதி தள்ளிவைத்தார்.

# தமிழக அரசு ஊழியர்கள் சொத்துகளின் விவரங்களை காட்டினால்தான் ப்ரோமோஷன்

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு



**சென்னை, அக்.09 :** தமிழக அரசு ஊழியர்கள் தங்களின் அசையும், அசையா சொத்துகள், சேமிப்பு, கடன் உள்ளிட்ட விவரங்களை வரும் 31ம் தேதிக்குள் IFHRMS இணைய தளத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று தலைமை செயலாளர் உத்தர விட்டுள்ளார்.

வேறு நபர்களின் பெயரில் சொத்துகள் இருந்தாலும், அது தொடர்பான விவரங்களையும், அவர்களுடனான உறவையும் குறிப்பிட வேண்டும். காலக்கெடுவுக்குள் சொத்து விவரங்களைத் தாக்கல் செய்தவர்களின் பெயர்கள் மட்டுமே பதவி உயர்வுப் பட்டியலில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சொத்து விவரங்களைத் தாக்கல் செய்யாதவர்கள் நன்னடத்தை விதிகளை மீறியதாகக் கருதப்படுவர்.

ஏற்கனவே கடந்த, 2010ல், தி.மு.க ஆட்சியின் போது, ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் குழுவின் பரிந்துரை அடிப்படையில், 'அரசு ஊழியர்கள் பணியில் சேர்ந்த மூன்று மாதத்துக்குள் தங்களின் சொத்து விபரங்களை தாக்கல் செய்ய வேண்டும். 'பின், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தாக்கல் செய்ய வேண்டும்' என்று உத்தரவிடப்பட்டது. அந்த உத்தரவு முறையாக அமல்படுத்தப் படவில்லை.

இந்நிலையில் தான், புதிதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க., அரசு, அரசு ஊழியர்கள் சொத்து விபரங்களை, வீடுகள், நிலங்கள், நகைகள், கார், இருசக்கர வாகனங்கள், ரொக்கம், கடன் என, அனைத்து விபரங்களையும் அக்., 31க்குள், அரசு இணையதளத்தில் பதிவு செய்ய உத்தரவிட்டு உள்ளது. அரசு ஊழியர்கள், பினாமி பெயரில் உள்ள சொத்துக்கள் உட்பட, அனைத்து சொத்து விபரங்களை தெரிவிக்க வேண்டும், இல்லாவிட்டால் பதவி உயர்வு கிடையாது என்று தமிழக அரசு உத்தர விட்டுள்ளது,அரசு ஊழியர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# ராகுல் காந்தி கைதுக்கு தவெக கண்டனம்

**சென்னை, அக்.09:** தவெக தலைமைக் கழகம் நேற்று இரவு வெளியிட்ட அறிக்கை: "தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே எஸ்ஐஆர் நடைமுறையை எதிர்த்தது. இப்போதும் அதே நிலைப்பாட்டைத்தான் தமிழக வெற்றிக் கழகம் கொண்டிருக்கிறது.

எஸ்ஐஆர் (ஷிமிஸி) நடைமுறைகளை முன்னிறுத்தி, புதுடெல்லியில் போராட்டம் நடத்திய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி உள்ளிட்ட தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதை தவெக கண்டிக்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரபல நடிகர் நானா படேகர் காலமானார்



**மும்பை, அக்.09:** இந்தியத் திரையுலகின் மிகச் சிறந்த நடிகர்களில் ஒருவரான நானா படேகர் இன்று (அக்.8) அதிகாலை கோவாவில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 75. அவரது மறைவு இந்தியத் திரையுலகினர், ரசிகர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கோவாவின் டோனா பவுலா பகுதியில் அமைந்திருந்த தனது இல்லத்தில் நானா படேகர் மயங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டார். உடனடியாக மீட்கப்பட்ட அவர், அருகிலிருந்த தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு மருத்துவர்கள் அவருக்குத் தொடர்ந்து 45 நிமிடங்கள் வரை சிபிஆர் சிகிச்சை அளித்து தீவிரமாக முயற்சி செய்த போதிலும், சிகிச்சை பலனின்றி அதிகாலை 5:20 மணியளவில் அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

இந்தி மற்றும் மராத்தி திரையுலகில் பல தசாப்தங்களாக தனது தனித்துவமான நடிப்பால் முத்திரை பதித்தவர் நானா படேகர். 'பரிந்தா', 'கிராந்திவீர்', 'அப் தக் சப்பன்ஹீ', 'பிரஹார்', 'அங்கார்' மற்றும் 'வெல்கம்' உள்ளிட்ட பல திரைப்படங்களில் இவரது நடிப்பு கொண்டாடப்படுகிறது.

தமிழில் பாரதிராஜா இயக்கிய 'பொம்மலாட்டம்' படத்திலும், பா.ரஞ்சித் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்த 'காலா' படத்திலும் சிறப்பான நடிப்பை வழங்கியிருந்தார்.

மூன்று தேசிய விருதுகள் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை குவித்துள்ள நானா படேகருக்கு மத்திய அரசு பத்மஶ்ரீ வழங்கி கவுரவித்தது. இவரது மறைவுக்குத் திரையுலகப் பிரபலங்களும் அரசியல் தலைவர்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# விமானப்படை வீரர்களால் இந்தியா பெருமை கொள்கிறது: பிரதமர் மோடி



**புதுடில்லி, அக்.09:** விமானப்படை வீரர்களால் இந்தியா பெருமை கொள்கிறது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

வீரர்களின் அர்ப்பணிப்பை பாராட்டும் விதமாக அக்டோபர் 8ல் ஆண்டுதோறும் விமானப்படை தினம் கொண்டாடப்படுகிறது. விமானபடையினர் இயற்கை பேரிடர் காலத்தில் மீட்பு பணிகளிலும் ஈடுபடுகிறது. விமானப்படை தினத்தில், பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

விமானப்படை வீரர்களைக் கண்டு இந்தியா பெருமை கொள்கிறது; விமானப்படை தினத்தில், நமது வான்பரப்பைப் பாதுகாப்பதில் அவர்கள் காட்டும் துணிச்சலையும் அர்ப்பணிப்பையும் நாம் போற்றுகிறோம். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: விமானப்படை தினத்தை முன்னிட்டு, அனைத்து விமானப் படை வீரர்களுக்கும், முன்னாள் வீரர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள். இந்திய விமானப்படை நாட்டிற்கு முன்மாதிரியான சேவையை ஆற்றியுள்ளது.

நாட்டை பாதுகாப்பதில் நமது விமானப்படை வீரர்களின் துணிச்சல் ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது நிரூபணம் ஆனது. அவர்களது அர்ப்பணிப்பு, நாட்டிற்கு உத்வேகமாகவும் பெருமையாகவும் விளங்குகிறது. இந்திய விமானப்படை தனது பெருமைமிக்க சேவையை தொடர்ந்து செய்யட்டும். இவ்வாறு திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

## தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிராகப் போராட்டம்

# பாதுகாப்பை பலப்படுத்தியது மத்திய அரசு

**புதுடில்லி, அக்.09:** இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை மத்திய அரசு மேலும் பலப்படுத்தியுள்ளது.

டில்லியில் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி இண்டி கூட்டணி சேர்ந்த காங்கிரஸ், திரிணமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் எம்பிக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். கரப்பான் பூச்சி ஜனதா தளம் கட்சியினர் வரும் அக் 10ம் தேதி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்த உள்ளதாக அறிவித்துள்ளனர்.

தலைமை தேர்தல் கமிஷனருக்கு எதிராக போராட்டம் வலுத்து வரும் நிலையில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளது. இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. டில்லியில் உள்ள அவரது இல்லத்திற்கு அருகிலும், ஆக்ராவில் உள்ள அவரது குடும்ப வீட்டின் முன்பும் போராட்டக்காரர்கள் திரண்டதால், அங்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் கமிஷன் தலைமையகத்திற்கும் அவரது தனிப்பட்ட பாதுகாப்பிற்கும் கூடுதல் வீரர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

கடந்த 2025ம் ஆண்டு பிப்ரவரி 19ம் தேதி முதல் இந்தியாவின் 26வது தலைமைத் தேர்தல் கமிஷனராக ஞானேஷ் குமார் பொறுப்பு வகித்து வருகிறார்.

## அக்.14 முதல் 20 நாட்களுக்கு

# வண்டலூர் பூங்காவில் சிங்கம், மான் உலாவிடப் பகுதிகள் மூடல்

**வண்டலூர், அக்.09:** வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் சிங்கம் மற்றும் மான் உலாவிடப் பகுதிகளில் அவசர பழுது மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால், அக்டோபர் 14ம் தேதி முதல் 20 நாட்களுக்கு அந்தப் பகுதிகள் பார்வையாளர்களின் பயன்பாட்டுக்கு மூடப்படும் என பூங்கா நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு: பூங்காவில் பார்வையாளர்களின் பாதுகாப்பு மற்றும் விலங்குகளின் நலனைக் கருத்தில் கொண்டு, சிங்கம் மற்றும் மான் உலாவிடப் பகுதிகளில் தேவையான பழுது மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. பணிகள் தொடங்கும் நாளான அக்.14 முதல் 20 நாட்களுக்கு இந்தப் பகுதிகளுக்கு பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்த இப்பகுதிகள் மீண்டும் திறக்கப்படும் தேதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

இதனால், பூங்காவுக்கு வரும் பொதுமக்கள் நிர்வாகத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். பராமரிப்புப் பணிகள் நடைபெறும் காலத்தில் பார்வையாளர்கள் திறந்திருக்கும் பகுதிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

பூங்கா நிர்வாகத்தின் அறிவிப்பு வெளியான பின்னரே இப்பகுதிகளுக்கு பார்வையாளர்கள் செல்ல அனுமதி வழங்கப்படும். எனவே மக்கள் சிரமங்களைத் தவிர்க்க திட்டமிட்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# அலிகர் பல்கலை.யில் மாணவர் பேரவை தேர்தல் நடத்தக் கோரி போராட்டம்

## 17 நாட்களாக உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்

**லக்னோ, அக்.09:** அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் மாணவர் பேரவைத் தேர்தலை நடத்தக் கோரி போராட்டம் நடைபெறுகிறது. இதில் மாணவர் ஒருவர் 17 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

உத்தர பிரதேசம் அலிகர் நகரில் உள்ள அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழகம், சுமார் 150 வருடங்கள் பழமையானது. மத்திய அரசின் தன்னாட்சி அதிகாரம் பெற்ற பல்கலைக்கழகமான இதன் மாணவர் பேரவை மிகவும் பிரசித்தி பெற்றது. ஏனெனில், இதன் முக்கிய நிர்வாகிகள் பலரும் இந்திய அரசியலில் நுழைந்து தலைவர்களாக உருவெடுத்துள்ளனர்.

குடியரசு முன்னாள் தலைவர் டாக்டர். ஜாகீர் உசைன் மற்றும் குடியரசு முன்னாள் துணைத் தலைவர் ஹமீது அன்சாரி, சமாஜ்வாதி மூத்த தலைவர் ஆஸம்கான், கேரளாவின் முன்னாள் ஆளுநர் ஆரிப் முகமது கான் உள்ளிட்ட பலரும் இப்பல்கலைக் கழக மாணவர் பேரவையில் இருந்தவர்கள். இதில் சுமார் 40,000 மாணவர்கள், 3,500 பேராசிரியர்கள் மற்றும் 5,000 அலுவலர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள். இதன் சிறுபான்மை அந்தஸ்துக்கு தடை விதிக்கப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவை உள்ளது.

இந்நிலையில், மத்திய பல்கலைக் கழகமான அதன் மாணவர் பேரவைத் தேர்தல் கடந்த 201819 கல்வியாண்டு முதல் நடத்தப்படவில்லை. இதை நடத்த வலியுறுத்தி, எம்.ஏ. (உருது) இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர் யாசீர் பஹாத் அக்டோபர் 17 முதல் வளாகத்தின் நுழைவு வாயில் அருகே உண்ணாவிரதம் இருந்து வருகிறார். இவரது உடல்நிலை குன்றுவதைச் சுட்டிக்காட்டிய பல்கலைக் கழக நிர்வாகம், நேற்று காலையில் அவரை அகற்ற முயன்றது. இதற்கு யாசீர் மறுக்க தற்போது போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

இதுகுறித்து மாணவர் யாசீர் பஹாத் கூறும்போது, 'பல்கலையில் கடந்த ஏழு வருடங்களாக நடைபெறும் ஊழலை தட்டிக் கேட்போம் என்பதால் பேரவைத் தேர்தல் நடத்தப்படாமல் உள்ளது.

தேர்தலுக் கான தேதி அறிவிக்கும் வரை எங்கள் போராட்டம் தொடரும். இத்துடன், போராட்ட மாணவர்கள் இடைநீக்கம் மற்றும் காவல் நிலையத்தில் பதிவான 18 வழக்கு களையும் ரத்து செய்ய வேண்டும். ஜனநாயக முறைப்படி நாங்கள் நடத்தும் போராட்டம் வெற்றி பெறும்' என்றார்.

# புதிய தீவிரவாத அலை: இஸ்ரேல் தூதர் எச்சரிக்கை

**புதுடெல்லி, அக்.09:** புதிய தீவிரவாத அலை பரவி வருகிறது என்று இந்தியாவுக்கு இஸ்ரேல் தூதர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதராக ரூவன் அசார் செயல்பட்டு வருகிறார். இந்நிலையில் அண்மையில் அவர் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

அண்மையில் துபாயிலிருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நோக்கி புறப்பட்ட ஃபிளை துபாய் விமானத்தை கடத்தி மோத முயற்சி நடந்தது. ஆனால் அதிர்ஷ்டவசமாக இது முறியடிக்கப்பட்டது. இந்திய விமானி ஸ்மித் மச்சாரின் வீரதீரச் செயல், பயணிகளின் துணிச்சல் ஆகியவற்றின் காரணமாகவே இந்தத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது. ஸ்மித் மச்சார் பாராட்டுக்குரியவர்.

சமீபகாலமாக உலகம் முழுவதும் தீவிரமான வகையில் இஸ்லாமிய தீவிரவாதத் தாக்குதல் அலை பரவி வருகிறது. தீவிரவாதிகள் நம்மை விட வேகமானவர்கள். நாம் அவர்களை விட வேகமானவர்களாக மாற வேண்டும். நாம் விடாமுயற்சியுடன் செயல்பட்டு அவர்களது தாக்குதல் திட்டங்களை முறியடிக்க வேண்டும். நிச்சயமாக அடுத்த தீவிரவாத அலை ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்திய பிராந்தியத்தில் உள்ள தீவிரவாத அமைப்புகளுக்கு ஹமாஸ் அமைப்பு உத்வேகம் அளித்துள்ளது. இதுபோன்ற தாக்குதல் மீண்டும் ஏற்படுவதைத் தடுக்க நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இவ்வாறு தூதர் ரூவன் அசார் தெரிவித்தார்.

# அரசுப் பள்ளி குடிநீர் தொட்டியில் மனிதக் கழிவு' சதியா என விசாரிக்க பாமக வலியுறுத்தல்

சென்னை, அக்.09: "திண்டுக்கல் மானூர் பள்ளியில் மனிதக் கழிவு கலக்கப்பட்ட விவகாரத்தின் பின்னணியில் சதி உள்ளதா என்பது பற்றி விசாரணை நடத்த வேண்டும்," என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திண்டுக்கல் மாவட்டம், பழநி அருகே உள்ள மானூர் கிராமத்தில் அரசு தொடக்கப்பள்ளியில் குடிநீர் தொட்டிக்குள் மனிதக் கழிவு கலக்கப்பட்டதாகவும், இந்த நிகழ்வு இரு நாட்களாக மூடி மறைக்கப்பட்ட நிலையில் அதைக் கண்டித்து மாணவர்களின் பெற்றோர்களும், ஊர்மக்களுக்கும் போராட்டம் நடத்தியதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. மனிதத்தன்மையற்ற இத்தகைய அருவருக்கத்தக்க செயல் கண்டிக்கத்தக்கது.

காலாண்டு விடுமுறை முடிந்து திங்கள்கிழமை பள்ளிக்கூடம் திறக்கப்பட்டபோது, உணவு தயாரிப்பதற்கான ஏற்பாடுகளில் பள்ளி ஊழியர்கள் ஈடுபட்டபோது, இந்தக் கொடுமை தெரியவந்துள்ளது.

உடனடியாக தண்ணீர் தொட்டியை பள்ளி நிர்வாகமே சுத்தம் செய்ததும், அந்தத் தொட்டியின் தண்ணீரில் சமைக்கப்பட்ட உணவை உட்கொள்ளும் குழந்தைகளுக்கு உடல்நல பாதிப்பு ஏற்படுமோ? என்ற பெற்றோரின் அச்சத்தையும், கவலையையும் போக்கும் வகையில் மாணவர்களுடன் கல்வித்துறை அதிகாரிகள் இன்று காலை உணவு அருந்தியதும் நம்பிக்கையளிக்கக் கூடியவை.

அதே நேரத்தில் இந்த நிகழ்வு வெளியில் தெரியாமல் மூடி மறைக்கப்பட்டது ஏன்? இந்த நிகழ்வின் பின்னணியில் சதித் திட்டம் ஏதேனும் உள்ளதா? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். இதற்கு காரணமானவர்கள் யார்? என்பது அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட வேண்டும்.

மானூர் தொடக்கப்பள்ளியை சுற்றிலும் சுற்றுச்சுவர் கட்டப்படாததும், போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லாததாதும் தான் , இரவு நேரங்களில் சமூக விரோதிகள் உள்ளே நுழைந்து இத்தகைய செயல்களை செய்வதற்கு காரணம் ஆகும். இதைத் தடுக்கும் வகையில் மானூர் பள்ளி உள்பட தமிழகம் முழுவதும் அனைத்து அரசு பள்ளிகளிலும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டும். மானூர் அரசு தொடக்கப்பள்ளியில் குடிநீர் தொட்டி மாற்றப்பட வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பைக் மீது தண்ணீர் லாரி மோதி முதியவர் பலி

## லாரிகளை சிறைபிடித்து மக்கள் போராட்டம்

**சென்னை, அக்.09:** சென்னை கோவிலம்பாக்கம் அருகே எஸ். கொளத்தூர் பகுதியைச் சேர்ந்தவர் கருப்பையா (75). இவர் பைக்கில் எஸ் . கொளத்தூர் பிரதான சாலை வழியாக சென்று கொண்டிருந்தார்.

அங்கன்வாடி அருகே சென்றபோது எதிரே வந்த தண்ணீர் லாரியால் நிலைதடுமாறி கீழே விழுந்துள்ளார். அந்த நேரத்தில் தண்ணீர் லாரியின் சக்கரம் அவர் மீது ஏறியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி இளைஞர்கள் எஸ்.கொளத்தூர் ஏரி அருகே திரண்டனர். தண்ணீர் எடுத்து விற்பனைக்காகச் சென்று கொண்டிருந்த தண்ணீர் லாரிகளை மடக்கிப் பிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள், "இப்பகுதியில் அனுமதியின்றி நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு தண்ணீர் லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்படுவதால் நிலத்தடி நீர்மட்டம் குறையும் அபாயம் உள்ளது. குடியிருப்புகள் நிறைந்த பகுதிகளில் லாரிகள் வேகமாக இயக்கப்படுவதால் தொடர் விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே இப்பகுதியில் தண்ணீர் லாரிகளின் இயக்கத்துக்கு தடைவிதிக்க வேண்டும்" என வலியுறுத்தினர்.

மேடவாக்கம் போலீஸார், "தண்ணீர் லாரிகளுக்கு நேரக் கட்டுப்பாடு

## டைடல் பார்க் சாலையில் திடீர் பள்ளம்:

# கார் கவிழ்ந்து விபத்து

**சென்னை, அக்.09:** சென்னை, திருவான்மியூர் டைடல் பார்க் அருகே மெட்ரோ ரயில் பணிகள் நடந்து வருகின்றன. இந்நிலையில் இப்பகுதியில் நேற்று காலை திடீரென பள்ளம் ஏற்பட்டது. சுமார் 10 அடி ஆழத்தில் பள்ளம் இருப்பதாகக் கூறப்படுகிறது. சாலையைக் கடக்க முயன்ற வெள்ள நிறச் சொகுசு கார் ஒன்று, திடீரென உருவான பள்ளத்தில் நிலைதடுமாறித் தலைகீழாகக் கவிழ்ந்து உள்ளே விழுந்தது. எனினும் நல்வாய்ப்பாக காரில் இருந்தவர்கள் லேசான காயங்களுடன் உயிர்தப்பினர்.

கார் பள்ளத்தில் தலைகீழாக விழுந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்த அப்பகுதி பொதுமக்கள் மற்றும் சக வாகன ஓட்டிகள் உடனடியாக மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்து நிகழ்ந்த இடத்திற்கு உடனடியாக விரைந்து வந்த போக்குவரத்து காவல் துறையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.




திருநெல்வேலி மாவட்டம், ராமையன்பட்டி பகுதியில் செல்லப் பிராணியான அப்பு என்ற பெயர் கொண்ட ஒரு வயது ஆண் நாய்க்குட்டி காணவில்லை என போஸ்டர் ஒட்டப்பட்டதால் பரபரப்பு அதனுடன் 2000 ரூபாய் சன்மானம் என்று வாசகத்தால் அச்சிடப்பட்டுள்ளது

## பெண் காவலரை ராகுல் காந்தி தள்ளிவிட்டதாக புகார்

# டெல்லி போலீஸ் வழக்குப் பதிவு

**புதுடெல்லி, அக்.09:** தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை எதிர்க்கும் போராட்டத்தில் ஒரு பெண் காவலரை, ராகுல் காந்தி தவறான முறையில் தொட்டு தள்ளிவிட்டதாகப் புகார் எழுந்துள்ளது. இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்த டெல்லி காவல்துறையினர் விசாரணையை தொடங்கியுள்ளனர்.



கடந்த செவ்வாய்க்கிழமை முதல் டெல்லியில் காங்கிரஸார் போராட்டம் நடத்தி வருகின்றனர். தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை ராஜினாமா செய்ய வலியுறுத்தியும், எஸ்ஐ ஆருக்கு எதிராகவும் நடக்கும் இப்போராட்டத்துக்கு ராகுல் காந்தி தலைமை ஏற்றுள்ளார்.

இந்தப் போராட்டம் இன்று மூன்றாவது நாளாக தொடர உள்ளது. இச் சூழலில் டெஎல்லியில் பல்வேறு இடங்களில் காங்கிரஸார் மற்றும் போலீஸாருக்கு இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டு வருகிறது.

இத்தகைய சூழலில், கூட்ட நெரிசலில் ராகுல் காந்தி பெண் காவலர் ஒருவரை தவறான முறையில் தொட்டுத் தள்ளிவிட்டதாகவும், பிரியங்கா காந்தி அக்காவலரை முழங்கையால் தாக்கிய தாகவும் குற்றஞ்சாட்டி பாஜக வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஜந்தர் மந்தர் அருகே காங்கிரஸ் நடத்திய போராட்டத்தின் போது, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி வத்ரா மற்றும் காவல்துறைக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இந்த வீடியோ வைரலானதைத் தொடர்ந்து, டெல்லி காவல்துறை முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளது.

இந்த வீடியோவில், காங்கிரஸ் தலைவர்கள் காவல்துறையினரால் தடுத்து நிறுத்தப்படும்போது அவர்களுடன் மோதுவதைக் காட்டும் பல காட்சிகள் சமூகவலைதளங்களில் பரவி வருகின்றன.

அத்தகைய ஒரு வீடியோவில், காங்கி ரஸ் எம்பி பிரியங்கா காந்தி வத்ரா பெண் காவலர் ஒருவரை முழங்கையால் தாக்குவது தெரிகிறது. மற்றொரு வீடியோவில், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பெண் காவலர் ஒருவரைத் தள்ளுவது காணப்படுகிறது.

போராட்டத்தின் போது காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்து பேருந்தில் ஏற்ற டெல்லி காவல்துறை முயன்றபோது இந்தச் சம்பவம் நடந்ததாகத் தெரிகிறது. இந்தச் சம்பவத்தில் ராகுல், பிரியங்கா மீது வழக்குகள் பதிவாகி உள்ளன.

இதில், காவல்துறையை தாக்கியது, அரசுப் பணியைத் தடுத்தது மற்றும் தள்ளுமுள்ளு மற்றும் தவறாக நடந்து கொண்டது ஆகிய குற்றச்சாட்டுகள் இடம் பெற்றுள்ளன.

இத்துடன், ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி மற்றும் காங்கிரஸ் பிரமுகர்கள் மற்றும் தொண்டர்கள் மீதும் டெல்லி காவல்துறை முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளது.

## தமிழகத்துக்கு 15 நாள்களுக்கு

# காவிரி நீரைத் திறந்துவிட ஒழுங்காற்றுக் குழு பரிந்துரை

**சென்னை, அக்.09:** தமிழ்நாட்டுக்கு வினாடிக்கு 3,000 கன அடி வீதம் 15 நாள்களுக்கு காவிரி நீரைத் திறந்து விடுமாறு காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு பரிந்துரைத்துள்ளது. தில்லியில் இன்று காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போது, தமிழ்நாட்டுக்கான காவிரி நீரை கர்நாடக அரசு திறந்து விடுவதில்லை என தமிழ்நாடு அரசு சார்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

தொடர்ந்து, தமிழ்நாட்டுக்கு வினாடிக்கு 12,000 கன அடி வீதம் 15 நாள்களுக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என தமிழக அரசு வலியுறுத்தியது. ஆனால், தமிழக அரசின் கோரிக்கைக்கு காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு மறுப்பு தெரிவித்தது.

இருப்பினும், தமிழ்நாட்டுக்கு வினாடிக்கு 3,000 கன அடி வீதம் 15 நாள்களுக்குத் தண்ணீர் திறந்துவிட ஒழுங்காற்றுக் குழு பரிந்துரை செய்தது.

தமிழ்நாட்டுக்கு காவிரி நீரை கண்டிப்பாக திறக்க முடியாது என கர்நாடக அரசு தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வரும்நிலையில், 15 நாள்களுக்கு வினாடிக்கு 3,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்க காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு பரிந்துரைத்துள்ளது.

## கொளத்தூர் எம்எல்ஏ வி.எஸ்.பாபு உடல்நிலை:

# அமைச்சர் அருண்ராஜ் விளக்கம்

**சென்னை, அக்.09:** "நீண்ட காலமாக சிகிச்சையில் இருக்கும் தவெக எம்எல்ஏவான வி.எஸ்.பாபு உடல்நிலை குறித்து மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுக் கொண்டுதான் இருக்கிறது. தற்போது உடல்நிலை குறித்து மருத்துவ அறிக்கை வெளியிடச் சொல்கிறோம்" என அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடத்தில் கூறும்போது, "தமிழகத்தில் ஜனவரி 1 முதல் நேற்று வரை இந்த ஆண்டில் மட்டும் டெங்கு காய்ச்சல் பாதிப்பால் 10 பேர் உயிரிழந்துள்ளனர். 21,655 பேருக்கு நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குடியிருப்பு பகுதியில் நீர் தேங்குவதை தடுக்க வேண்டும். டெங்கு பரவல் தடுப்பில் அரசின் முயற்சிக்கு மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும்.

பருவ மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொசு ஒழிப்பு முயற்சிகளை பார்வையிட்டேன். சென்னையில் 3,700 பேர் வீடு வீடாக சென்று கொசு ஒழிப்பு பணியில் ஈடு பட்டுள்ளனர்.

நீண்ட காலமாக சிகிச்சையில் இருக்கும் தவெக எம்எல்ஏவான வி.எஸ்.பாபு உடல்நிலை குறித்து மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுக் கொண்டுதான் இருக்கிறது. தற்போது உடல்நிலை குறித்து மருத்துவ அறிக்கை வெளியிடச் சொல்கிறோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## சதுரகிரி செல்ல அனுமதி

**விருதுநகர், அக்.09:** விருதுநகர் ஸ்ரீவில்லிபுத்தூர் சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோயிலுக்கு செல்ல அனுமதி.

மகாளய அமாவாசையை முன்னிட்டு, வரும் அக்டோபர் 11 வரை பக்தர்கள் மலையேறி தரிசனம் செய்ய அனுமதி.

அனுமதிக்கப்பட்ட நாட்களில் கனமழை பெய்தால் சதுரகிரி மலையேற தடை விதிக்கப்படும் மாவட்ட நிர்வாகம் என அறிவித்துள்ளது.

## மேகேதாட்டு வழக்கை துரிதப்படுத்த

# தமிழக அரசுக்கு வைகோ வலியுறுத்தல்

**சென்னை, அக்.09:** கர்நாடக அரசு மேகேதாட்டுவில் புதிய அணை கட்ட அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் அடிக்கல் நாட்டப்படும் என அம்மாநில அமைச்சர் பேசியுள்ளதற்கு மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கர்நாடக மாநிலம் மண்டியாவில் அக்டோபர் 7ஆம் தேதி நடந்த கூட்டத்தில் கர்நாடக நீர்ப்பாசனத் துறை அமைச்சர் செலுவராயசாமி, "மேகேதாட்டுவில் புதிய அணையை கட்டுவதே காவிரி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு. விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த முடிவும் எடுக்கப்படாது. அடுத்த ஆண்டு (2027) மார்ச் மாதத்துக்குள் மேகேதாட்டுவில் புதிதாக அணை கட்ட அடிக்கல் நாட்டப்படும்.

இதுதான் கர்நாடக அரசின் உறுதியான முடிவு. முந்தைய காலத்துடன் ஒப்பிடுகையில், தற்போது தமிழகத்துக்கு மிகக் குறைந்த அளவே காவிரியில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணை கட்டுவதற்கான அனைத்து தொழில்நுட்ப மற்றும் சட்டரீதியான பணிகளும் நிறைவடைந்துவிட்டன.

மத்திய நீர்வள ஆணையத்திடம் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. டெல்லியில் உள்ள அதிகாரிகள் நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருகின்றனர்." என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மேகேதாட்டு அணை கட்டுவதற்கு மத்திய அரசு தான் அனுமதி தர வேண்டுமே தவிர, தமிழக அரசின் அனுமதி தேவையில்லை என்று கர்நாடகா முதல்வர் டி.கே.சிவகுமார், தொடர்ந்து கூறி வருகிறார். தமிழகம் கடந்த 30 முதல் 40 ஆண்டுகளாக மேகேதாட்டு அணையை எதிர்த்து வருகிறது. இந்த விவகாரம் குறித்து நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்துவிட்டது.

காவிரி மேலாண்மை ஆணையமும், மத்திய அரசும் எங்களுடைய விரிவான திட்ட அறிக்கையை பெற்றுள்ளன. அவர்கள் அதனை ஆய்வு செய்வார்கள். இந்த விவகாரம் இப்போது மத்திய அரசின் கைகளில் உள்ளது. தமிழக அரசின் அனுமதி தேவையில்லை, என்றும் கர்நாடக முதல்வர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஏற்கனவே நாடாளுமன்றத்தில் ஜல் சக்தித்துறை இணை அமைச்சர் ராஜ் பூஷன் சௌத்ரி , காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டு அணை கட்ட கர்நாடக அரசுக்கு தமிழக அரசின் அனுமதி பெற வேண்டிய கட்டாயம் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்.

தமிழக அரசு தொடர்ந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. ஆனால் கர்நாடக அரசு மேகேதாட்டு அணை கட்டுவதில் முனைப்பாக இருப்பதை காணும் போது ஒன்றிய பாஜக அரசு மறைமுகமான அனுமதியை வழங்கி உள்ளதோ என்ற ஐயப்பாடு எழுகிறது.

காவிரிப்படுகை மாவட்டங்களில் காவிரி நீர் வரத்து இல்லாமல் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்கள் கருகிக் கொண்டிருக்கின்றன. உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும் கர்நாடக அரசு காவிரியில் தமிழகத்துக்கு உரிய நீரை திறந்து விடவில்லை. இந்த சூழலில், மேகேதாட்டு அணை கட்ட அடிக்கல் நாட்டுவோம் என்று கர்நாடக மாநில நீர்ப்பாசனத்துறை அமைச்சர் பேசியிருப்பது கண்டனத்துக்குரியது.

வஞ்சகமான முறையில் கர்நாடக அரசுக்கு துணை போகும் ஒன்றிய அரசின் முயற்சியை முறியடிக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## நெல்லை அருகே அரசுப் பேருந்து – டிப்பர் லாரி நேருக்கு நேர் மோதல்:

# நடத்துனர் பலி; 20 பேர் காயம்!

**நெல்லை, அக்.09:** நெல்லை பிராஞ்சேரி அருகே அரசுப் பேருந்து – டிப்பர் லாரி நேருக்கு நேர் மோதியதில் நடத்துனர் பலியானார். பெண்கள், குழந்தைகள் உள்பட 20க்கும் மேற்பட்டோர் காய மடைந்தனர்.

திருநெல்வேலியில் இருந்து பாபநாசம் நோக்கி 80க்கும் மேற்பட்ட பயணிகளுடன் அரசுப் பேருந்து இன்று காலை சென்று கொண்டிருந்தது. பிராஞ்சேரி அருகே கொழுமடை பகுதியில் சென்றபோது, எதிரே மண் ஏற்றிச் சென்ற டிப்பர் லாரி வந்துள்ளது.

அப்போது இரு வாகனங்களும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதியதாகக் கூறப்படுகிறது. மோதிய வேகத்தில் பேருந்து மற்றும் டிப்பர் லாரியின் முன்பகுதிகள் பலத்த சேதமடைந்தன.

விபத்து ஏற்பட்ட உடனேயே பேருந்துக்குள் இருந்த பயணிகள் வலி தாங்க முடியாமல் அலறித் துடித்தனர். குழந்தைகள், பெண்கள் உள்ளிட்டோர் அச்சத்தில் கதறி அழுதனர். பலர் காயங்களுடன் பேருந்துக்குள் சிக்கிக் கொண்டதால் சம்பவ இடமே பெரும் பதற்றமாக மாறியது.

பொதுமக்கள் உடனடியாக ஓடி வந்து காயமடைந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

தகவல் கிடைத்ததும் சேரன்மகாதேவி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். பேருந்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

மேலும், சேரன்மகாதேவி துணை காவல் கண்காணிப்பாளர் ஆண்டோ ஆர்கே ஆரோக்கியராஜ் தலைமையில் சம்பவ இடத்தில் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

காவல்துறை, தீயணைப்புத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தினர் இணைந்து காயமடைந்த அனைவரையும் மீட்டு, 5க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ்கள் மூலம் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த கோர விபத்தில் அரசு பேருந்தின் நடத்துனர் அஜித் மெல்வின் ஆர்தர் (52) உயிரிழந்தார். விபத்தில் சிக்கி நடத்துனர் உயிரிழந்த சம்பவம் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினரிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கண்ணிமைக்கும் நேரத்தில் நிகழ்ந்த இந்த கோர விபத்தில் நடத்துனர் உயிரிழந்து, 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ள நிலையில், 10 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 2 பேர் கவலைக்கிடமாக இருப்பது நெல்லை மாவட்டத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## இலக்கியத்துக்கான

# நோபல் பரிசு எழுத்தாளர் ஆன் கார்சன் தேர்வு

**புதுடெல்லி, அக்.09**

இந்த ஆண்டின் இலக்கியத்துக்கான நோபல் பரிசுக்கு கனடா நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் ஆன் கார்சன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டின் (2026) நோபல் பரிசுகள் வேதியியல், இயற்பியல், மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தேர்ந்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், இலக்கியத்துக்கான நோபல் பரிசு கனடாவைச் சேர்ந்த 76 வயதான எழுத்தாளர் ஆன் கார்சனுக்கு வழங்கப்படும் என நோபல் அகாடெமி அறிவித்துள்ளது.

கடந்த 1981 ஆம் ஆண்டு "ஓடி எட் அமொஎர்கோசம்" எனும் தலைப்பில் இலக்கியம் குறித்த தனது ஆய்வேட்டை (தீசிஸ்) வெளியிட்டார்.

## ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணியை

# தனியாருக்குத் தாரைவார்ப்பதா?: டிடிவி தினகரன்

**சென்னை, அக்.09:** "சென்னை உட்பட 12 மண்டலங்களில் ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்துவதற்கு மின் பகிர்மானக் கழகம் வெளியிட்டிருக்கும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான அறிவிப்பை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்," என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில், "சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், திருச்சி, மதுரை உள்ளிட்ட 12 மண்டலங்களில் மறுசீரமைக்கப்பட்ட மின்விநியோகத் திட்டத்தின் மூலம் (Revamped Distribution Sector Scheme) ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்துவதற்காக தமிழக மின் பகிர்மானக் கழகம் வெளியிட்டிருக்கும் ஒப்பந்தப் புள்ளிகளுக்குக் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

சென்னை மாநகரத்தில் உள்ள அனைத்து நுகர்வோர்களுக்கும், மாநிலத்தின் பிற பகுதிகளில் உள்ள 50 லட்சம் தொழில் மற்றும் வணிக நுகர்வோர் களுக்கும் ஸ்மார்ட் மீட்டர்கள் அமைக்கும் நடைமுறை அறிமுகப் படுத்தப்படும் என்ற நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றிருந்த அறிவிப்பை மின்சார வாரியமே செயல்படுத்த முன்வராமல், தனியாருக்குத் தாரைவார்க்கும் வகையில் ஒப்பந்தப்புள்ளிகளை அறிவித்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணியைத் தனியாருக்குத் தாரை வார்க்கும் மின்சார வாரியத்தின் முடிவால், குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் 200 யூனிட் இலவச மின்சாரமும், விவசாயம் மற்றும் நெசவுத் தொழிலுக்கு வழங்கப் படும் இலவச மின்சாரமும் நிறுத்தப்படும் அபாயம் உருவாகும் என்பதோடு, மின்சார வாரியத்தில் தமிழக இளைஞர் களுக்கான வேலைவாய்ப்பும் பறிபோகும் சூழல் ஏற்படும் என மின்வாரியத் தொழிற்சங்கங்கள் கவலை தெரிவித்துள்ளன.

தமிழகத்தில் அறிமுகப்படுத்தப் படவிருக்கும் ஸ்மார்ட் மீட்டர் திட்டம் பிரிபெயர்ட் (Prepaid) திட்டமா அல்லது போஸ்ட் பெயர்ட் (Postpaid) திட்டமா? தமிழக மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள சலுகை தொடருமா? பீக் ஹவர் நேரத்தில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப் படுமா? ஏற்கனவே உள்ள 3 கோடி மீட்டர்களின் நிலை என்ன? என மின் நுகர்வோரின் எந்தவொரு கேள்விக்கும் பதில் அளிக்காமல், மொட்டைக் கடிதம் போல டெண்டர் அறிவிப்பை வெளியிட்டிருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது.

ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த ஐந்து மாதங்களில் தூய்மைப் பணிகள் தொடங்கி, குடிநீர் விநியோகம், அரசுப் பேருந்துகளுக்கான ஓட்டுநர்கள், நடத்துநர்கள் நியமனம், பாதாளச் சாக்கடைத் திட்டம், ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணிகள் என தமிழகத்தின் அனைத்துப் பணிகளையும் தனியாரிடம் ஒப்படைத்துவிட்டு, தவெக அரசு யாருக்காக ஆட்சி நடத்தப் போகிறது என்ற கேள்விதான் ஒட்டு மொத்த மக்களின் மத்தியிலும் தற்போது எழுந்துள்ளது.

எனவே, தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கூடுதல் சுமையை ஏற்படுத்துவதோடு, இளைஞர்களின் வேலைவாய்ப்பையும் கேள்விக் குறியாக்கும் சென்னை உட்பட 12 மண்டலங்களில் ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்துவதற்கு மின் பகிர் மானக் கழகம் வெளியிட்டிருக்கும் ஒப்பந்தப் புள்ளிகளுக்கான அறிவிப்பை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என தவெக அரசை வலியுறுத்துகிறேன்"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## குன்றத்தூர் அபிராமி ஜாமீன் மனு நிராகரிப்பு

# தண்டனையை நிறுத்தி வைக்க ஐகோர்ட் மறுப்பு

**சென்னை, அக்.09:** தனது குழந்தைகளுக்கு பாலில் விஷம் கலந்து கொடுத்து கொலை செய்த வழக்கில், குன்றத்தூர் அபிராமிக்கு ஜாமீன் வழங்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூரைச் சேர்ந்த விஜய் அபிராமி தம்பதிக்குத் திருமணமாகி, நான்கு மற்றும் ஆறு வயதில் 2 குழந்தைகள் இருந்தனர். டிக்டாக்கில் பிரபலமான அபிராமிக்கு அந்த பகுதியைச் சேர்ந்த பிரியாணிக் கடையில் பணியாற்றும் மீனாட்சி சுந்தரம் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது.

திருமணம் தாண்டிய இந்த உறவுக்குத் தடையாக இருந்த தனது 2 குழந்தைகளுக்கும் கடந்த 2018ம் ஆண்டு பாலில் விஷம் வைத்து, அபிராமி கொலை செய்தார். பின்னர், மீனாட்சி சுந்தரத்துடன், கேரளா தப்பிச் செல்ல முயன்றபோது, இரண்டு பேரையும் போலீஸார் கைது செய்தனர்.



இந்த வழக்கை விசாரித்த காஞ்சிபுரம் மகிளா நீதிமன்றம், அபிராமி மற்றும் மீனாட்சி சுந்தரம் ஆகிய இருவருக்கும் சாகும் வரை சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

சிறப்பு நீதிமன்ற உத்தரவை ரத்து செய்யக் கோரியும், தண்டனையை நிறுத்தி வைத்து ஜாமீன் வழங்கக் கோரியும் அபிராமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார்.

இந்த மனு, நீதிபதிகள் என்.சதீஷ் குமார் மற்றும் கே.ராஜசேகர் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அபிராமி தரப்பில், குற்றச் சம்பவத்தில் மனுதாரரை தொடர்புபடுத்த எந்த நேரடி ஆதாரமும் இல்லை என்பதால், தண்டனையை நிறுத்தி வைத்து ஜாமீன் வழங்க வேண்டும் என வாதிடப்பட்டது.

இந்த வாதத்தைக் கேட்ட நீதிபதிகள், வழக்கில் முதல் சாட்சியான அபிராமியின் கணவர் அளித்த சாட்சியத்தில், குழந்தைகளுக்கு கொடுத்த பால் கசப்பாக இருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

வழக்கு ஆதாரங்களை பார்க்கும்போது, தற்போதைய நிலையில், தண்டனையை நிறுத்தி வைக்க தகுதியான வழக்கு இது அல்ல எனக் கூறி, அபிராமியின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. மேலும், பிரதான மேல் முறையீட்டு வழக்கை நவம்பர் 4ஆம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.





சிகரத்தின்

# தினத்தென்றல்

RNI: NO TNTAM/2013/55872 Postal R.No: TN/CC(S)DN/525/15-17

E.MAIL: dhinathendral@gmail.com Ph:044 - 79690504, 98400 83174





## நேரடி பரிமாற்ற திட்டத்தில் பயனாளிகளுக்கு இதுவரை ரூ.50 லட்சம் கோடி வழங்கல்

### பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்



**புதுடெல்லி, அக்.09:** அரசு சேவைகளை வழங்குவதில் மொபைல் போன்கள் முக்கிய பங்கை வகிப்பதாக தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, நேரடிப் பயன் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு ரூ.50 லட்சம் கோடி வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்திய மொபைல் காங்கிரஸ் அமைப்பின் 10ம் ஆண்டு மாநாடு புதுடெல்லியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "மொபைல் போன் என்பது வெறும் தகவல் தொடர்பு சாதனமாக மட்டுமல்லாமல், நிர்வாகம் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான ஒரு முக்கிய கருவியாக மாறியுள்ளது.

நூற்றுக்கணக்கான அரசு சேவைகள் இப்போது மொபைல் போன்களிலேயே கிடைக்கின்றன. மொபைல் எண்களுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு அரசு நேரடியாக பணத்தை அனுப்புகிறது.

நேரடிப் பயன் பரிமாற்றத் திட்டம் மூலம் ரூ.50 லட்சம் கோடி பயனாளிகளின் மொபைல் எண்களுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதன் காரணமாக சுமார் ரூ.5 லட்சம் கோடி தவறான கைகளுக்குச் செல்வது தடுக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு நேரடி நிதி உதவியை வழங்கும் பிரதமரின் கிசான் சம்மன் நிதி திட்டத்தின் மூலம் ரூ.4 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக மாற்றப்பட்டுள்ளன. இத்தொகை ஒவ்வொரு நான்கு மாதங்களுக்கு ஒருமுறை அளிக்கப்படுகிறது.

பணம் வரவு வைக்கப்பட்டவுடன் விவசாயிகள் தங்கள் மொபைல் போன்களில் அதற்கான அறிவிப்பைப் பெறுகிறார்கள். குறைவான பயணம், குறைவான காத்திருப்பு நேரம், குறைவான செலவு, அதிக வசதி ஆகியவற்றை மொபைல் போன்கள் உறுதி செய்துள்ளன.

2022ம் ஆண்டை ஒப்பிடுகையில், மொபைல் இணைய வேகம் பத்து மடங்கு அதிகரித்துள்ளது. 5ஜி இணைப்பு வசதி நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்றடைந்துள்ளது. தற்போது 5.5 லட்சத்துக்கும் மேற்பட்ட பேஸ் ஸ்டேஷன்கள் மூலம் இந்த நெட்வொர்க் இயங்கி வருகிறது.

5G பயனர்களின் எண்ணிக்கையை 55 கோடியில் இருந்து 2030க்குள் 100 கோடியாக இரட்டிப்பாக்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது. தொலைத்தொடர்பு துறையில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தில் இந்திய மொபைல் காங்கிரஸின் பங்கு மிக முக்கியமானது. இந்தியாவின் முன்னேற்றத்தையும் அதன் லட்சியங்களையும் பிரதிபலிக்கும் ஒரு தளமாக இது உருவெடுத்துள்ளது." என தெரிவித்தார்.



முதலமைச்சர் ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதி கடற்படைத் தலைவர் ரியர் அட்மிரல் உப்பல் குண்டு, வி.எஸ்.எம். மற்றும் லெப்டினண்ட் கமாண்டர் அரவிந்த கிருஷ்ணன் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள்.

## நான் சுமந்து வளர்த்தெடுத்த சென்னை மெட்ரோ ரயில் என்னும் குழந்தை: மு.க.ஸ்டாலின்



**சென்னை, அக்.09:** பூந்தமல்லி போரூர் வடபழனி மெட்ரோ வழித்தடம் வரும் 11ம் தேதி தொடங்கிவைக்கப்பட உள்ள நிலையில், "சென்னை மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றத்திலும் திமுக அரசின் இடம் சரித்திரத்தில் எவராலும் மறைக்க முடியாத இடமாக நிலைபெற்றிருக்கும்" என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திராவிட மாடல் அரசால் கட்டி முடிக்கப்பட்ட பூந்தமல்லி போரூர் வடபழனி இடையேயான சென்னை மெட்ரோ வழித்தடம் அக்டோபர் 11ஆம் தேதி மக்கள் பயன்பாட்டுக்கு வரவுள்ள நிலையில், அதுகுறித்த சில செய்திகளைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டம் நான் துணை முதல்வராக இருந்தபோது தொடங்கப்பட்டது. இதற்காக, அப்போது நான் ஜப்பான் சென்று JICAவின் நிதியைப் பெற்று வந்து இந்தத் திட்டத்தை மேற்கொண்டோம்.

இதனையடுத்து சென்னை மெட்ரோ ரயிலின் முதற்கட்டப் பணிகள் நிறைவுபெற்றபோது, விமான நிலையம் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் கோயம்பேடு புறநகர்ப் பேருந்து முனையம் என சென்னையின் முக்கியமான போக்குவரத்து மையங்கள் இணைக்கப்பட்டு, சென்னையின் வளர்ந்து வரும் போக்குவரத்து நெரிசலுக்கு மாமருந்தாகவும், மாநகரின் பொதுப் போக்குவரத்து அமைப்பில் மிகப்பெரும் மைல்கல்லாகவும் இது அமைந்தது. தற்போது இத்தடத்தில் விம்கோ நகர் வரை ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

சென்னை மெட்ரோ ரயிலின் இரண்டாம் கட்டப் பணிகள் கடந்த அதிமுக ஆட்சிக்காலத்தில் பல்வேறு காரணங்களால் சுணக்கம் கண்டிருந்த நிலையில், 2021ஆம் ஆண்டு நமது திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும் அதனை விரைவுபடுத்தினோம். இதற்கான ஒன்றிய அரசின் பங்களிப்பு நிதி மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக விடுவிக்கப்படாமல் இருந்த நிலையிலும், பணிகளைத் தொய்வின்றி மேற்கொண்டோம்.

2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நான் பிரதமரை நேரில் சந்தித்தபோதும் இதுகுறித்துப் பேசினேன். இதற்குப் பின்னர்தான், அக்டோபர் மாதம் நமது கோரிக்கை ஒன்றிய அரசால் ஏற்கப்பட்டது. ஒன்றிய அமைச்சர் மனோகர் லால் கட்டாரையும் சென்னை மெட்ரோ இரயில் தலைமையகத்தில் சந்தித்து, இதற்காக நன்றி தெரிவித்து மெட்ரோ விரிவாக்கத்தை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து அவரிடம் பேசினேன்.

இவற்றுக்கிடையே, MRTS சேவையையும் சென்னை மெட்ரோ நிர்வாகமே எடுத்துச் செயல்படுத்திடுவதற்கான முன்மொழிவுக்கு ஒப்புதல் பெறுவதற்கும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டோம். அதற்கும் தற்போது ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சென்னை போலவே கோவை, மதுரை மாநகரங்களில் மெட்ரோ அமைக்க ஒப்புதல் வேண்டியும் ஒன்றிய அரசுடன் போராடினோம். CUMTA அமைப்புக்குப் புத்துயிரூட்டி, சென்னையின் போக்குவரத்து வசதிகள் அனைத்தையும் இணைத்து, Chennai One என்ற ஒரே செயலியில் அனைத்துப் பயணச்சீட்டுகளையும் டிஜிட்டல் முறையில் பெறும் முறையை அறிமுகப்படுத்தினோம்.

ஒருவழியாகச் சென்னை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த இந்த வழித்தடம் பயன்பாட்டுக்கு வர இருப்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியும் மன நிறைவும் கொள்கிறேன். ஆண்டுக் கணக்கில் நான் சுமந்து வளர்த்தெடுத்த சென்னை மெட்ரோ ரயில் என்னும் குழந்தையை அடியெடுத்து வைப்பதில் தாய்மை உணர்வுடன் பெருமை கொள்கிறேன்" என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்று சாதனை படைத்த கோவை சேர்ந்த தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜை நடிகர் ரஜினி நேரில் அழைத்து பாராட்டி கவுரவித்தார்.

## 5 வயது குழந்தைக்கு கூட பாதுகாப்பில்லை! தவெக ஆட்சியில் காவல்துறை தூங்குகிறதா?

### பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கேள்வி



**சென்னை, அக்.09:** சமீபத்தில் தான் கும்மிடிப்பூண்டியில் 3 வயது பிஞ்சுக் குழந்தை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு முட்புதரில் வீசப்பட்ட கொடூர சம்பவம் அரங்கேற்றி நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்நிலையில் அடுத்த கொடூரமாக, சென்னை திருவொற்றியூரில் வடமாநிலத் தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த 5 வயது பிஞ்சுக் குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம் ஒட்டுமொத்த தமிழகத்தையும் அதிர்ச்சியிலும் பெருந்துயரிலும் ஆழ்த்தியுள்ளது.

இதற்கு தவெக அரசுக்கும் கண்டனம் தெரிவித்து பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளார். அதில் "வாழ்வாதாரம் தேடி தமிழகத்தை நம்பி வந்து ஏழைத் தொழிலாளியின் குழந்தைக்குத் தலைநகரிலேயே பாதுகாப்பில்லாத அவல நிலையை எண்ணி நெஞ்சம் பதறுகிறது" என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது, பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிரான இத்தகைய கொடூரங்கள் தமிழகத்தில் அடுத்தடுத்துத் தொடர்கதையாகி வருவது மிகுந்த வேதனையளிக்கிறது. வெற்றுப் பேச்சுகளால் அமைந்த தவெக ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு முற்றிலும் முடங்கிவிட்டது. காவல் துறையையும் உள்துறையையும் தன் வசம் வைத்துள்ள முதலமைச்சர் விஜய் செயலற்றுக் கிடப்பதால், பொது மக்களே வீதியில் இறங்கிக் குற்றவாளிகளைப் பிடிக்கும் அவல நிலை உருவாகியுள்ளது.

குற்றவாளிகளுக்குச் சட்டத்தின் மீதான பயம் துளியும் இல்லாமல் போனதற்கும், குற்றங்கள் தலைவிரித்தாடுவதற்கும் இந்த ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடும் அனுபவமின்மையுமே முக்கியக் காரணம். இந்த கொடூரச் செயலில் ஈடுபட்ட குற்றவாளிக்கு போக்சோ சட்டத்தின் கீழ் விரைவு நீதிமன்றம் மூலம் அதிகபட்சத் தண்டனையைப் பெற்றுத் தருவதோடு, பாதிக்கப்பட்ட குழந்தைக்கு அரசே முன்னின்று உயர்தர மருத்துவ சிகிச்சையை விரைவு வழங்க வேண்டும்.

இனியாவது வெற்றுப் பிம்ப அரசியலை விட்டுவிட்டு, பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய விஜய் உடனடியாகக் களத்தில் இறங்கிக் கவனம் செலுத்த வேண்டும்.


சிகரம் மீடியாவின் தினத்தென்றல் நாளிதழுக்கு நிருபர்கள் தேவை!
9840083174, 7708107284


## புதிய தலைமைச் செயலக திட்டத்தை கைவிடாவிட்டால் மாபெரும் போராட்டம்: சீமான் எச்சரிக்கை



**சென்னை, அக்.09:** "தமிழக அரசு பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை நிறுத்தி, அந்நிலத்தை வணிகப் பயன்பாட்டு மண்டலமாக மாற்றும் ஒப்புதலை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்" என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "சென்னை பட்டினப்பாக்கத்தில் உள்ள 21.37 ஏக்கர் நிலத்தை வணிகப் பயன்பாட்டு மண்டலமாக மாற்றுவதற்குச் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஒப்புதல் அளித்திருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

இடநெருக்கடி மிகுந்த பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைக்க மீனவச் சொந்தங்களும், பொது மக்களும், அரசியல் கட்சிகளும் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்துவரும் நிலையில், நிலப் பயன்பாடு மாற்ற நடவடிக்கைகளை தவெக அரசு முன்னெடுப்பது, மக்களின் உணர்வுக்கும் உரிமைக்கும் மதிப்பளிக்காத ஆணவப் போக்கையே காட்டுகிறது.

குடியிருப்பு, பொழுது போக்கு மற்றும் திறந்தவெளி வகைப்பாடுகளில் இருந்த நிலத்தை இடைத்தேர்தல் முடிந்த அடுத்தநாள் வணிகப் பயன்பாட்டிற்கு மாற்ற வேண்டிய அவசியம் என்ன? தவெக அரசுக்கு உண்மையிலேயே துணிவிருந்தால் இடைத்தேர்தலுக்கு முன்பே ஏன் மாற்றவில்லை?

ஒருபுறம் நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், உத்தண்டி ஆகிய பகுதிகளில் கடற்கரை விதி மீறல் என்றுகூறி மக்கள் கட்டிய 129 கட்டிடங்களை காலி செய்ய மாநகராட்சி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

மறுபுறம் கடற்கரை பகுதியான பட்டினப்பாக்கத்தில் மக்களின் எதிர்ப்பையும் மீறி தலைமைச் செயலகம் கட்ட வேக வேகமாக அரசே முயல்வது நியாயம்தானா? கடற்கரையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கு மட்டும்தானா? அரசுக்கு இல்லையா? மக்களுக்கு ஒரு நீதி? அரசுக்கு வேறு நீதி என்பது நீதியல்ல; பெரும் அநீதி.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.


Owned, Printer and Published by G.SASIREKA. Published from No:28, 2nd Avenue, Ashok Nagar, Chennai-83 Printing at Annai Abirami Achagam, No. 24, Vengu Chetty Street, Punga Nagar, Chennai - 600 003. Editor: S. SENTHILKUMAR, Office: No:9, 4th Block, Veeramamunivar Street, Mogappair East, Chennai - 37.